வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No.: P.1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu — ஈළනාඩු




Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 26.03.2026 வியாழக்கிழமை இதழ் : 79 பக்கங்கள் : 08

# ரஷ்யாவிடம் எரிபொருளை பெறும் பேச்சுவார்த்தை முக்கிய கட்டத்தில்!

## அந்நாட்டு பிரதி அமைச்சர் கொழும்பு வருகிறார்

கொழும்பு, மார்ச் 26

ரஷ்யாவிலிருந்து எரிபொருள் கொள்வனவு செய்வது தொடர்பான ஆலோசனைகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், ரஷ்யாவின் எரிசக்தி பிரதி அமைச்சர் ரோமன் மார்ஷவின் இன்று இலங்கை வர வுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ரஷ்ய எரிசக்தி பிரதி அமைச்சரின் இந்த வருகையை உறுதிப்படுத்திய அமைச்சர் விஜித ஹேரத், இன்று நடைபெறவுள்ள சந்திப்பில் அவரோடு முக்கிய பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளதாகவும் தெரிவித்தார்.

ரஷ்யாவிடமிருந்து அரசாங்கங்களுக்கு இடையிலான ஒப்பந்தத்தின் அடிப்படையில் எரிபொருளைப் கொள்வனவு செய்வது குறித்து இராஜதந்திர மட்டத்திலான பேச்சு வார்த்தைகள் நடைபெற்று வருவதாக அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

ரஷ்யாவிலிருந்து எரிபொருள் இறக்குமதி செய்யப்படுமா என எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அவர், ரஷ்ய பிரதி அமைச்சரின் வருகையின் போது இது குறித்து விரிவாக ஆராயப்படும் எனத் தெரிவித்தார்.

(அ)

# யாழ். பல்கலையின் துணைவேந்தராக பேராசிரியர் தி.வேல்நம்பி பதவியேற்பு

யாழ்ப்பாணம், மார்ச் 26

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 11ஆவது துணைவேந்தராக சிரேஷ்ட பேராசிரியர் தி. வேல்நம்பி நேற்று, புதன்கிழமை தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜாவின் பதவிக்காலம் நேற்றுடன் நிறைவுக்கு வந்ததைத் தொடர்ந்து இன்று முதல் அடுத்துவரும் மூன்று வருடங்களுக்குச் செயற்படும் வகையில் கணக்கியலில் சிரேஷ்ட பேராசிரியரும், உயர்பட்டப் படிப்புகள் பீடத்தின் பீடாதிபதியுமான பேராசிரியர் தி.வேல்நம்பி துணைவேந்தராக ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கபாவினால் நியமிக்கப்பட்டிருந்தார்.

07



### மக்களின் காணிகளை கையப்படுத்தியுள்ள

# வனஜீவராசிகள் திணைக்களம் உடனே வெளியேறவேண்டும்!

## கட்டைக்காடு பங்குந்தந்தை வசந்தன் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 26

வடமராட்சி கிழக்கில் பெருமளவான மக்களின் நிலப்பரப்பை கையகப்படுத்தி வைத்துள்ள வனஜீவராசிகள் திணைக்களம் மக்களின் காணிகளை மக்களிடமே கையளித்து விட்டு உடன் வெளியேற வேண்டுமென கட்டைக்காடு பங்குத்தந்தை அருட்திரு வசந்தன் அடிகளார் தெரிவித்துள்ளார்.

அண்மையில் கட்டைக்காடு - கேவில் பகுதியில் யானைகள் ஏற்படுத்திய

07

# அமெரிக்கா அறிவித்த போர் நிறுத்த முன்மொழிவை நிராகரித்தது ஈரான்

தெஹ்ரான், மார்ச் 26

அமெரிக்காவினால் திணிக்கப்பட்ட போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்காக முன்வைக்கப்பட்ட அமெரிக்காவின் முன்மொழிவை ஈரான் நிராகரித்துள்ளதாக அந்நாட்டின் உயர்மட்ட அரசியல் - பாதுகாப்பு அதிகாரி ஒருவர் சர்வதேச ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

போர் எப்போது முடிவுக்கு வரவேண்டும் என்பதை ஈரானே தீர்மானிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் போர் முடிவுக்கு வருவதற்கான நேரத்தை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தீர்மானிக்க ஈரான் அனுமதிக்காது அவர் கூறியுள்ளார்.

மேலும் "ஈரான் எப்போது

07

# வடக்கு விவசாயிகளின் பிரச்னை; ஆளுநரின் தலைமையில் ஆராய்வு

யாழ்ப்பாணம், மார்ச் 26

வடக்கு மாகாண விவசாயத் துறையை தேசிய மட்டத்திற்கு இணையாக கட்டியெழுப்புவதுடன், மாகாண விவசாயிகள் எதிர்நோக்கும் நீண்ட காலப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நோக்கிலான உயர் மட்டக் கலந்துரையாடல், வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் நேற்று யாழ்ப்பாணத்தில் உள்ள ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்றது.

விவசாயத் திணைக்களத்தின் தேசிய பணிப்பாளர் நாயகம் விக்கிரமாராச்சி தலைமையிலான

07

# திறைசேரியை சூறையாடிக்கொண்டு பெலவத்தை கணக்கை நிரப்பும் அரசு!

## சாடுகின்றது பொதுஜன பெரமுன

கொழும்பு, மார்ச் 26

தற்போதைய அரசாங்கம் நாட்டின் பொது திறைசேரியை சூறையாடிக்கொண்டு, தமது அரசியல் தலைமையகமான பெலவத்தையின் கணக்குகளை நிரப்பி வருவதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சம்பத் அத்துகோரள கடுமையாக விமர்சித்துள்ளார்.

பத்தரமுல்லயில் உள்ள பொதுஜன பெரமுனவின் கட்சித் தலைமையகத்தில் நேற்று

07

# அரச சேவைகளைத் தடையின்றி முன்னெடுக்க விசேட தீர்மானம்!

கொழும்பு, மார்ச் 26

அரச சேவைகளை எவ்வித இடையூறுமின்றி சீரான முறையில் முன்னெடுத்துச் செல்வதற்காக நியமிக்கப்பட்ட அமைச்சரவை உபகுழுவின் இரண்டாவது கூட்டம் நேற்று நடைபெற்றது. பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் இக்கூட்டம் இடம்பெற்றது.

பொதுமக்களுக்கு அரசாங்கத்தின் சேவைகளைத் தடையின்றி வழங்குவது குறித்தும், அரச ஊழியர்கள் எதிர்கொள்ளும் சவால்களைத் தவிர்ப்பதற்கு எடுக்கப்பட் வேண்டிய அவசர நடவடிக்கைகள்

07

# பிரதமர் பங்கேற்ற கூட்டத்தில் கலந்துகொள்ளாத ஆசிரியர்கள்

## தங்காலை கல்வி அலுவலகம் விசாரணை

கொழும்பு, மார்ச் 26

கடந்த மார்ச் 15ஆம் திகதி தங்காலை நகர மண்டபத்தில் பிரதமர் ஹரிணி அமரசூரியவின் தலைமையில் நடைபெற்ற விசேட கூட்டத்தில் ஆசிரியர்கள் கலந்து கொள்ளாமை தொடர்பாக தங்காலை வலயக் கல்வி அலுவலகம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

வலயக் கல்வி அலுவலகத்தினால் முன்னரே அறிவித்தல் வழங்கப்பட்டிருந்த போதிலும், கணிசமான எண்ணிக்கையிலான ஆசிரியர்கள் இந்த

07

# மணற்காட்டில் மக்களை தாக்கிய பொலிஸ் மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணை

யாழ்ப்பாணம், மார்ச் 26

பருத்தித்துறையில் இருந்து மணல்காடுக்கு சுற்றுலா சென்றவர்கள் மீது சிவில் உடையில் நின்ற பொலிஸார் தாக்குதல் மேற்கொண்ட சம்பவம் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய அலுவலகம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

மணல்காட்டுக்கு சுற்றுலா சென்ற இளைஞர் குழு மீது சிவில் உடையில் பொலிஸ் வாகனத்தில் சென்ற பொலிஸார் தாக்குதல் நடத்திய வீடியோ காட்சிகள் சமூக வலைத்தளங்களில் பரவியிருந்தன.

இதில் காயமடைந்த மூவர் மந்திகை ஆதார வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெற்ற

07

# சுரேஷ் சாலேக்கு திடீர் சுகவீனம்!

கொழும்பு, மார்ச் 26

தடுப்புக்காவல் உத்தரவின் கீழ் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் பொறுப்பில் இருந்த அரச புலனாய்வுச் சேவையின் முன்னாள் பிரதானி மேஜர் ஜெனரல் (ஓய்வு பெற்ற) சுரேஷ் சாலே, திடீர் உடல்நலக்குறைவு

07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

# சித்திரை புத்தாண்டுக்கு பின் மின்வெட்டு ஏற்படும் அபாயம்

## மின்சார பொறியியலாளர் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 26

சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டு காலத்தின் பின்னர் நாட்டில் மீண்டும் மின்வெட்டு அமல்படுத்தப்படக் கூடிய அபாயம் காணப்படுவதாக இலங்கை மின்சார சபை பொறியியலாளர் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

தற்போது தடையின்றி மின்சாரம் வழங்கப்பட்டபோதிலும், நிலவும் டீசல் தட்டுப்பாடு மற்றும் நிலக்கரி விநியோகத்தில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் காரணமாக இம்முறைமையை புத்தாண்டுக்குப் பிறகு தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வது கடினம் என மூத்த பொறியியலாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

மின் உற்பத்திக்குத் தேவையான எரிபொருள் இருப்பு குறைந்து வருவதால், தற்போதைய சூழலில் மின் விநியோகத்தை சீராகப் பேணுவது பெரும் சவாலாக மாறியுள்ளது.

குறிப்பாக, தரமற்ற நிலக்கரி இறக்குமதி காரணமாக நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தில் முழுமையான உற்பத்தியை மேற்கொள்ள முடியாமல் போயுள்ளதும், டீசல் மூலம் இயங்கும் மின் உற்பத்தி நிலையங்களுக்குத் தேவையான எரிபொருள் கிடைக்காததும் இந்த நெருக்கடியை தீவிரப்படுத்தியுள்ளது.

புத்தாண்டுக் காலத்தில் பொதுமக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களைத் தவிர்ப்பதற்காகவே தற்போது மின்வெட்டு தவிர்க்கப்படுவதாகவும், எனினும் நிலைமை சீராகாவிட்டால் ஏப்ரல் நடுப்பகுதிக்குப் பிறகு பகல் நேரத்திலோ அல்லது இரவு நேரத்திலோ கட்டாய மின்வெட்டை அமல்படுத்த வேண்டியிருக்கும் என்றும் பொறியியலாளர்கள் எச்சரித்துள்ளனர். (அ)

# சிசுவின் சடலம் மீட்பு!

கொழும்பு, மார்ச் 26

மீகஸ்வெவ, பள்ளியகொடல்ல பகுதியில் உள்ள தனியார் காணி ஒன்றிலிருந்து பெண் சிசு ஒன்றின் உடலம் கண்டெடுக்கப்பட்ட சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மீகஸ்வெவ பொலிஸ் நிலையத்திற்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, சம்பவ இடத்திற்கு விரைந்த அதிகாரிகள் சிசுவின் உடலத்தை மீட்டனர். முதற்கட்ட விசாரணைகளின் படி, அந்த பெண் சிசு உயிரிழந்து சுமார் இரண்டு நாட்கள் இருக்கலாம் எனத் தெரியவந்துள்ளது.

சம்பவம் இடத்திற்கு வருகை தந்த நீதவான், ஆரம்ப கட்ட விசாரணைகளை முன்னெடுத்தார். இதனைத் தொடர்ந்து, மரணத்திற்கான துல்லியமான காரணத்தைக் கண்டறிவதற்காக சிசுவின் உடலம் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளது.

குறித்த சிசுவின் பெற்றோர் யார்? எதற்காக சிசு கைவிடப்பட்டது? என்பது குறித்த மேலதிக விசாரணைகளை மீகஸ்வெவ பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# மின்சார வெட்டுத் திட்டம் எதுவும் அரசிடம் இல்லை!

கொழும்பு, மார்ச் 26

அன்றாடம் மாலை 6:00 மணி முதல் இரவு 10:00 மணி வரை மின்சாரத்தை சிக்கனமாகப் பயன்படுத்துமாறு எரிசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடி பொதுமக்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

அதேநரேம், மத்திய கிழக்கில் பதற்றம் அதிகரித்து வரும் நிலையிலும், எரிசக்தி நெருக்கடி நிலவி வரும் நிலையிலும், மின்வெட்டு விதிப்பது குறித்து இதுவரை எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

கம்பஹா மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இந்த விடயத்தைக் தெரிவித்தார்.

இதன்போது அமைச்சர் குமார ஜயக்கொடி மேலும் கூறியதாவது:-

பொதுமக்களுக்கு சிரமத்தை ஏற்படுத்தாத வகையிலும், அன்றாட நடவடிக்கைகள் தடையின்றித் தொடர அனுமதிக்கும் வகையிலும் மின்சாரமும் எரிபொருளும் விநியோகிக்கப்படுவதை உறுதி செய்வதே அரசாங்கத்தின் நோக்கமாகும்.

ஒரு பிராந்தியமாக நாம் இதைச் சிறப்பாக நிர்வகித்து வருகிறோம் என்று நான் நம்புகிறேன், நாம் அவ்வாறே தொடர்ந்து செய்ய வேண்டும். எரிபொருள் கொள்முதல் உட்பட தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் நாங்கள் எடுத்து வருகிறோம்.

பலர் பரிந்துரைத்த போதிலும், மின்வெட்டை விதிக்கும் எண்ணம் அரசாங்கத்திற்கு இல்லை என்று நான் பொறுப்புடன் உங்களுக்கு உறுதியளிக்கிறேன்.

மே மாதம் வரை அனைத்து நுகர்வுத் தேவைகளையும் பூர்த்தி செய்ய எங்களிடம் போதுமான எரிபொருள் உள்ளது, எனவே பீதியடையத் தேவையில்லை- என்றார். (அ)

# கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தின் சர்வதேச மகளிர் தினமும் கௌரவிப்பும்

முல்லைத்தீவு, மார்ச் 26

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலக சர்வதேச மகளிர் தினமும் கௌரவிப்பு நிகழ்வும் நேற்று முன்தினம் கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தில் இடம் பெற்றது.

கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் இ.விஜயகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் 16 பெண்கள் முக்கியமாக சமூக செயல்பாட்டாளர்கள், தொழில் முயற்சியாளர்கள், மாற்றத்தை ஏற்படுத்தும் பெண்கள், சிறந்த பெண் தலைமைத்துவம் என வகைப்படுத்தப்பட்டு விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக அகிலத்திருநாயகி அம்மா அவர்களும், பிரதேச செயலக பதவிநிலை உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். (அ)



# 1000 ஆண்டு பழமையான மன்னர்களின் நெல் யாழ்.மண்ணில் விளைந்த அதிசயம்!

யாழ்ப்பாணம், மார்ச் 26

இந்தியாவில் ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்னர் மன்னர்களால் பயன்படுத்தப்பட்ட நெல் வகை, யாழ்ப்பாணத்தில் முதல் தடவையாக அறுவடை செய்யப்பட்டு பொங்கல் விழா நடத்தப்பட்டுள்ளது.

கறுப்பு கவணி என்ற நெல், மாப்பிள்ளை சம்பா என்ற நெல் மற்றும் கரு இழை என்ற நெல்லுமே, யாழ்ப்பாணம் - வட்டுக்கோட்டை பகுதியில் விதைக்கப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் அறுவடை செய்யப்பட்டுள்ளது.

குறித்த நெல்லினங்கள் இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்டு பயிரிடப்பட்டுள்ளன.

இந்த நிலையில், நேற்று முன்தினம் வயலில் பொங்கல் விழா நடத்தப்பட்டபோது, யாழ்ப்பாண இந்திய துணை தூதரக அலுவலகத்தினால் விவசாயிகளுக்கு தேவையான விவசாய உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. (அ)

# வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வளவில் சிறப்புற நடந்தது புத்தரிசி விழா



முல்லைத்தீவு, மார்ச் 26

முல்லைத்தீவு மாவட்டத்திற்கான 2026 ஆம் ஆண்டுக்கான புத்தரிசி விழா கடந்த திங்கட்கிழமை வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வளாகத்தில் சிறப்பாக இடம்பெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்கள பிரதி ஆணையாளர் பிரான்சிஸ் கனியூட், தலைமையில் வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வளாகத்தில் பொங்கல் வழிபாடுகள் இடம்பெற்று கறியமுதம் பரிமாறி 2026 ஆம் ஆண்டுக்கான புத்தரிசி விழா சிறப்பாக இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவரும் கூட்டுறவு பிரதி அமைச்சருமான உபாலி சமரசிங்க, கரைதுறைப்பற்று பிரதேச சபை தவிசாளர் திருமதி இமக்குலேற்றா [illegible] கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்தனர். (அ)

# யானைகள் திட்டமிட்டே கொண்டுவரப்பட்டுள்ளன

## பாதிக்கப்பட்ட குடும்பஸ்தர் குற்றச்சாட்டு



யாழ்ப்பாணம்

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு- கேவில்பகுதியில் யானைகள் திட்டமிட்டு கொண்டுவரப்பட்டு விடப்பட்டதாக அப்பகுதியில் பாதிக்கப்பட்ட குடும்பஸ்தர் கவலை தெரிவித்துள்ளார்.

உரிய முறையில் அறிவித்தும் யானைகள் ஏற்படுத்திய சேதத்தை அதிகாரிகள் இன்னும் பார்வையிடவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஒரு சில தினங்களுக்கு முன்பு யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு-கேவில் கடற்கரைக்கு வருகை தந்த ஐந்துக்கும் மேற்பட்ட யானைகள் அங்கு காணப்பட்ட 36 இற்கும் அதிகமான தென்னைகளை நாசம் செய்தன.

சம்பவம் தொடர்பாக உரியவர்களுக்கு தெரிவித்தோம். இதுவரை உரியவர்கள் வந்து பார்வையிடவோ, நட்ட ஈடு வழங்கவோ இல்லையென பாதிக்கப்பட்டவர் தெரிவித்துள்ளார்.

யானைகள் சேதம் ஏற்படுத்திய இடத்தில் இருந்து 50 மீற்றர் தொலைவில் இராணுவ முகாம் இருப்பதாகவும் அவர்களுக்கு யானைகள் வந்தமை தெரியவில்லை என்று இராணுவத்தினர் தெரிவிப்பதாக பாதிக்கப்பட்டவர் குறிப்பிட்டார்.

வடமராட்சி கிழக்கின் பெரும்பகுதி அதாவது கட்டைக் காட்டில் இருந்து சுண்டிக்குளம் வரையான பெரும் நிலப்பரப்பு தேசிய பூங்கா என்று அடையாளப்ப டுத்தப்பட்டுள்ளது.

அதனை உறுதி செய்யும் விதமாக வனஜீவராசிகள் திணைக்களத்தினர் வேண்டுமென்றே இந்த யானைகளை வடமராட்சி கிழக்கு காட்டுப் பகுதிக்கு கொண்டு வந்து விட்டதாக சந்தேகிப்பதாக பாதிக்கப்பட்ட குடும்பஸ்தர் தெரிவித்துள்ளார். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
26.03.2026 வியாழக்கிழமை
விசுவாவசு வருடம், பங்குனி 12

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## ஈரானிய கப்பல் விவகாரத்தை உள்நாட்டு அரசியலுக்கு பயன்படுத்தலாகாது!

இலங்கையின் கடல் பிராந்தியத்துக்கு வெளியே ஈரானியப் போர்க் கப்பலை அமெரிக்க நீர்மூழ்கி மூழ்கடித்த சம்பவத்துடன் தொடர்புடைய விவகாரங்களை கையாள்வதில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கடைப் பிடித்த அணுகுமுறைகளில் தொடர்ந்தும் தவறு கண்டுபிடிப்பதில் எதிரணி மும்முரமாக ஈடுபட்டிருக்கிறது.

கப்பல் மூழ்கடிக்கப்பட்ட உடனடியாக மார்ச் 4ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தில் அவசரமாகக் கூட்டிய செய்தியாளர்கள் மகாநாட்டில் உரையாற்றிய ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க மார்ச் 9ஆம் திகதிக்கும் 13ஆம் திகதிக்கும் இடைப்பட்ட நாட்களில் கொழும்புக்கு விஜயம் செய்வதற்கு ஈரானியக் கப்பல் குழு வேண்டுகோள் விடுத்ததாகவும் ஆனால், தேவையான நடைமுறைகளை பூரணப்படுத்த முடியாமல் போய் விட்டதாகவும் கூறினார்.

அந்த நடைமுறைகளை பூரணப்படுத்துவதற்கு முன்னதாக ஈரானியப் போர்க்கப்பல் அமெரிக்க நீர்மூழ்கியின் தாக்குதலுக்கு உள்ளாகிவிட்டது என்பதே ஜனாதிபதியின் கூற்றின் அர்த்தமாகும்.

ஆனால், பிறகு கடந்த வாரம் பாராளுமன்றத்தில் உரையாற்றிய அவர் ஈரானியக் கப்பல் இலங்கைக்கு வருவதற்கு விடுத்த வேண்டுகோளையும் மத்தள விமான நிலையம் ஊடாக செயற்படுவதற்கு அமெரிக்க இராணுவ விமானங்கள் விடுத்த வேண்டுகோளையும் தாங்கள் நிராகரித்து இலங் கையின் நடுநிலையை உறுதிப்படுத்தியதாக குறிப்பிட்டார்.

ஆனால், இந்தியாவில் சர்வதேச கடற்படைக் கப்பல் பயிற்சிகளில் கலந்துகொண்ட ஈரானிய கடற்படைக் கப்பல்கள் குழுவிடம் இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு கடற்படைத் தளபதி வைஸ் அட்மிறல் காஞ்சன பனாகொட அழைப்பு விடுத்திருந்ததாக கொழும்பில் உள்ள ஈரானியத் தூதுவர் அலிரேசா டெல்கோஷ் கடந்த திங்கட்கிழமை கூறியதைத் தொடர்ந்து ஒரு குழப்பநிலை உருவாகியிருக்கிறது.


தூதுவர் வெளியிட்ட தகவலின் பின்புலத்தில், ஈரானியக் கப்பல்கள் விவகாரத்தை இலங்கை அரசாங்கம் கையாண்ட முறை குறித்து மீளாய்வு செய்யவேண்டியிருக்கிறது என்று முன்னாள் வெளியுறவு அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் கூறியிருக்கிறார்.

நூறுக்கும் அதிகமான ஈரானியக் கடற்படை வீரர்கள் மரணமடைந்த சம்பவம் மிகவும் பாரதூரமானது என்றும் அமெரிக்காவும் இஸ்ரேலும் பெப்ரவரி 28 ஆம் திகதி ஈரானுக்கு எதிராகத் தொடுத்த போருக்கு பதிலடி கொடுக்கும் எந்த நடவடிக்கையிலும் ஈடுபட்டிராத ஈரானியக் கப்பல் மீது நடத்தப்பட்ட ஆத்திரமூட்டப்படாத தாக்குதல் தொடர்பில் இலங்கை அரசாங் கம் பாராமுகமாக இருக்க முடியாது என்றும் கூறியிருக்கும் பேராசிரியர் பீரிஸ், அமெரிக்கத் தாக்குதல் குறித்து உகந்த அறிக்கையை வெளியிடு வதை தவிர்ப்பது நடுநிலைக் கொள்கை என்று அர்த்தப்படாது என்று மேலும் குறிப்பிட்டிருக்கிறார்.

சுற்றிவளைக்காமல் கூறுவது என்றால், அமெரிக்க நீர்மூழ்கியின் தாக்குதலை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கடுமையாகக் கண்டனம் செய்து வாஷிங்டனுக்கு அதன் ஆட்சேபபையை தெரிவித்திருக்க வேண் டும் என்று பேராசிரியரின் நிலைப்பாடாக இருக்கிறது.

டொனால்ட் ட்ரம்ப் இரண்டாவது தடவையாக வெள்ளை மாளிகைக்கு வந்த பிறகு சர்வதேச விவகாரங்களைக் கையாளுவதில் கடைப்பிடிக்கின்ற அடாவடித்தனமான அணுகுமுறைகள் உலக அரங்கில் பெரும் குழப்ப நிலையை தோற்றுவித்திருக்கின்றன. குறிப்பாக, ஈரானுக்கு எதிராக அவர் தொடுத்த போரைக் கண்டிப்பதில் இந்தியா போன்ற பெரிய நாடுகளே தடுமாறிக் கொண்டிருக்கும் நிலையில் இலங்கை போன்ற சிறிய நாடுகள் கடுமையான நிலைப்பாடுகளை உடனடியாக வெளிக்காட்டாமல் இருந்தது குறித்து தவறு காண்பது தற்போதைய சூழ்நிலையில் விவேகமான காரிய மில்லை. அரசாங்கத்துக்கு எதிரான பிரசாரத்துக்கு மத்திய கிழக்குப் போரைப் பயன்படுத்தக்கூடாது.

# ஆறு தசாப்த கால பத்திரிகைச் சேவையை நிறைவு செய்யவிருந்த நிலையில் உலகிற்கு விடைகொடுத்த சலீம்



*அரை நூற்றாண்டுக்கும் அதிகமான கால மாக பிராந்திய செய்தியாளர்களாக பணியாற் றிவருபவர்கள் என்று வடக்கு, கிழக்கு மாகா ணங்களில் ஒரு இன்று சிலரே இருக்கிறார்கள். அத்தகையவர்களில் ஒருவரை இயற்கை நேற் றைய தினம் பறித்துச் சென்று விட்டது.*

*கிழக்கு மாகாணத்தில் அதுவும் குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் நீண்ட கால அனுப வமுடைய பத்திரிகையாளரான ஏ.எல்.எம். சலீமின் மரணம் சுமார் மூன்று தசாப்தங்களாக நெருக்கமான உறவைக் கொண்டிருந்த நண் பனை என்னிடமிருந்து அபகரித்து விட்டது.*

*2023 செப்ரெம்பரில் சலீமின் 75 ஆவது அகவையை முன்னிட்டு அவருக்கு வாழ்த்துக் களைத் தெரிவித்து பத்திரிகைகளுக்கு எழுதிய நான் மூன்று வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னதாக அவருக்கு அஞ்சலிக் குறிப்பை எழுத வேண்டிய துரதிர்ஷ்டத்துக்கு உள்ளா கியிருக்கிறேன்.*

*அண்மைக் காலமாக அவர் இருதய நோயி னால் பாதிக்கப்பட்டிருந்தார். சில மாதங்களு க்கு முன்னர் சலீமை அவரது மகளின் திருமண வைபவத்தின்போது கொழும்புக்கு வெளியே தெஹிவளை ஹோட்டல் ஒன்றில் சந்தித்தேன். அதுவே எங்கள் இருவருக்கும் இடையிலான இறுதிச் சந்திப்பாக அமைந்து விட்டது. தமிழ் ஊடகவியலாளர் சமூகத்துக்கு அவரது மரணம் பெரியதொரு இழப்பாகும். அதற்கு அப்பால் என்னை நேசித்த நல்லுள்ளம் ஒன்றை நான் இழந்து விட்டேன்.*

*நிந்தவூரைச் சேர்ந்த சலீம் 1966 ஆம் ஆண்டு வீரகேசரியின் செய்தியாளராக பத்திரிகைத் துறையில் பிரவேசம் செய்தார். பிறகு சுதந்தி ரன், தினகரன், தினபதி, சிந்தாமணி, தினக் குரல் என்று பல பத்திரிகைகளின் பிராந்திய செய்தியாளராக பணியாற்றி தனது சேவையை விரிவுபடுத்தினார். யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் உதயன் தினசரியின் அம்பாறை மாவட்டச் செய்தியாளராக அதன் தொடக்க காலம் முதலிருந்தே சலீம் பணியாற்றி வருகி றார். இதனிடையே, அவரின் பணியின் தரம் கண்டு சில இலத்திரனியல் ஊடகங்களும் கூட அவரது சேவையை நாடின.*

*இலங்கையின் தமிழ்ப் பத்திரிகைத் துறையில் வளமான ஒரு மரபை விட்டுச் சென்ற புகழ்பூத்த பத்திரிகை ஆசிரியர்களான அமரர்கள் எஸ்.டி. சிவநாயகம், ஆர்.சிவகுரு நாதன், கே.சிவப்பிரகாசம், எஸ். நடராசா, கே.கே. இரத்தினசிங்கம், கானமயில்நாதன் ஆகியோரின் காலத்தில் அவர்களின் வழிநடத் தலில் பணியாற்றிய சலீம் இன்றைய இளம் பத்திரிகை ஆசிரியர்களின் காலத்திலும் பிரா ந்திய செய்தியாளராக பணியைத் தொடர்ந் தார்.*

*நகவல் தொழில் நுட்பத்தின் அபார வளர்ச்சி காரணமாக பத்திரிகையாளர்களின் செயற்பா ட்டு முறைகளில் நவீன கருவிகளைப் பயன் படுத்தி கடைப் பிடிக்கவேண்டியிருக்கும் மாற்றங்களுக்கு தன்னை இசைவாக்கிக் கொண்டு தங்கள் பணியை தொடர்ந்தும் செய்துவந்த தமிழ்பேசும் பத்திரிகையாளர் களில் சலீமும் ஒருவர்.*

*வெறுமனே பிராந்திய செய்திகளை மாத் திரம் அனுப்பும் ஒரு செய்தியாளராக மாத்தி ரமல்ல, அரசியல், சமூகப் பிரச்னைகளை வெளிக்கொணர்ந்த பெருவாரியான கட்டுரை களையும் சலீம் எழுதிவந்திருக்கிறார். பத்திரி கையாளர்களுக்கு இருக்கவேண்டிய சமூகப் பிரக்ஞையின் பால் மிகுந்த சிரத்தை காட்டி தனது பணிகளை முன்னெடுத்துவந்தவர் சலீம்.*

*பிரதானமாக அம்பாறை மாவட்டத்தை தனது களமாகக் கொண்டு செயற்பட்டு வந்த போதிலும், ஊடகவியலாளர்களின் உரிமை கள் மற்றும் நலன்களுக்காக குரல் கொடுக்கும் பல்வேறு அமைப்புக்களில் முக்கிய பங்கை வகித்த காரணத்தால் கிழக்கு மாகாணத்திற்கு அப்பால் வடமாகாணம், மலையகம் மற்றும் தலைநகர் கொழும்பு உட்பட நாட்டின் பல பாகங்களிலும் தமிழ் பேசும் ஊடகவிய லாளர்கள் மத்தியில் மிகுந்த நட்புரிமை கொண்டவராக சலீம் விளங்கினார்.*

*முஸ்லிம் மீடியா ஃபோரம், இலங்கை தமிழ் ஊடகவியலாளர்கள் ஒன்றியம் ஆகிய வற்றின் தாபக உறுப்பினரான சலீம், கிழக்கில ங்கை செய்தியாளர்கள் சங்கம், அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர்கள் சம்மேளனம், தென்கிழக்கிலங்கை செய்தியாளர்கள் சங்கம் ஆகியவற்றின் தலைவராகவும் இருந்தார்.*

*சலீமின் பத்திரிகைத்துறைச் சேவைக்காக அவர் பல்வேறு விருதுகள் வழங்கிக் கௌர விக்கப்பட்டார். கலாபூசணம் விருது (2008), இலங்கை பத்திரிகை ஆசிரியர்கள் சங்கமும் இலங்கை பத்திரிகை ஸ்தாபனமும் இணைந்து வருடாந்தம் வழங்கும் வாழ்நாள் சாதனையா ளர் விருது (2017), கல்முனை மாநகர சபையின் ஊடக முதுசம் பட்டம் என்பவை அவருக்கு கிடைத்த மிகவும் குறிப்பிடத்தக்க விருதுகள்.*

*பத்திரிகைத்துறையில் சலீம் 50 வருடங்க ளைப் பூர்த்திசெய்ததை முன்னிட்டு சில வரு டங்களுக்கு முன்னர் அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர்கள் சம்மேளனம் விமரிசை யாகப் பெருவிழா எடுத்து அவரைக் கௌர வித்ததுடன் “பொன்விழாக்காணும் சலீம்” என்ற சிறப்பு மலரையும் வெளியிட்டது. அந்த விழாவில் கலந்துகொண்டு உரையாற்றி அவரைக் கௌரவப்படுத்தும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது.*

*அந்த விழாவில் தமிழ்,முஸ்லிம் அரசியல் தலைவர்கள் பலரும் நாட்டின் பல பாகங்களை யும் சேர்ந்த ஊடகவியலாளர்களும் சமூகப்பிர முகர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர். அது தனது பத்திரிகைத்துறை வாழ்வில் சலீம் செய்த பெறுமதியான பங்களிப்புகளுக்காக சமூகம் அவர் மீது கொண்டிருந்த அபிமானத் தின் சான்றாக அமைந்தது.*

*சலீம் போன்ற மிகவும் நீண்டகால பிராந்திய செய்தியாளர்களின் அனுபவங்கள் இன்றைய இளம் தலைமுறை ஊடகவியலார்களுக்கு முன்னுதாரணமாக அமையக்கூடியவை. இந்த வருடம் சலீமின் பத்திரிகைத்துறை வாழ்வு ஆறு தசாப்தங்களைப் பூர்த்திசெய்யும் நிலை யில் அவர் உலகிற்கு விடை கொடுத்துவிட்டார்.*

*எனக்கும் சலீமுக்கும் இடையிலான நட்பு மூன்று தசாப்த கால நீட்சி கொண்டது. கடந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் தினக்குரல் பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டபோது அதன் முதல் செய்தி ஆசிரியர் என்ற வகையில் நான் கிழக்கு மாகாணத்தின் பிரதேசங்களுக்கு செய் தியாளர்களைத் தேடிக்கொண்டிருந்த போது எனக்கு அறிமுகப்படுத்தப்பட்டவர்களில் திருகோணமலையின் மூத்த பத்திரிகையாளர் சின்னையா குருநாதனும் அம்பாறை மாவட் டத்தின் சலீமும் மட்டக்களப்பின் சண். தவரா சாவும் முக்கியமானவர்கள்.*

*அவர்கள் தினக்குரலின் பிராந்தியச் செய்தி யாளர்களாக பணியாற்ற முன்வந்ததுடன் மாத்திரம் நின்றுவிடவில்லை, பல்வேறு பகுதிகளில் செய்தியாளர்களாக நியமிக்கப்ப டக்கூடியவர்களுடன் எனக்கு தொடர்புகளை ஏற்படுத்தியும் தந்தார்கள். அவர்களது உதவி கள் விரிவான பிராந்தியச் செய்தியாளர்கள் கட்டமைப்பு ஒன்றை உருவாக்க எனக்கு பெரிதும் உதவியது.*

*தினக்குரலின் ஆரம்பக் கட்ட வளர்ச்சியில் ஒரு பிராந்தியச் செய்தியாளர் என்ற வகையில் சலீமின் பங்களிப்பு பெரிதும் குறிப்பிடத் தக்கது.*

*பத்திரிகைத்துறையில் செழுமையான மரபொன்றை விட்டுச்செல்லும் அருமை நண்பர் சலீமின் குடும்பத்தவர்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்கள்.*

**- வீரகத்தி தனபாலசிங்கம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




**மேடம்**
உங்களிடம் பழகும் நண்பர்கள் உறவினர்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள். முயற்சியால் முன்னேறும் நாள்.

**இடபம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்த மனக்கசப்பு நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள்.

**மிதுனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சில காரியங்களை போராடி முடிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் சொந்த விஷயங்களில் தலையிட வேண்டாம். எதிர்பார்ப்புகள் தாமதமாகி முடியும் நாள்.

**கடகம்**
விவாதங்களை தவிர்ப்பது நல்லது. சகோதர வகையில் மனத்தாங்கல் வரும். வியாபாரத்தில் வேலையாட்களை அனுசரித்துப் போங்கள். பிரச்னைகள் வரக்கூடும். அலைச்சலுடன் ஆதாயம் தரும் நாள்.

**சிம்மம்**
ராஜதந்திரமாக செயல்பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள். வியாபார ரீதியாக சில முக்கியஸ்தர்களை சந்திப்பீர்கள். உத்தியோகத்தில் எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள். சிறப்பான நாள்.

**கன்னி**
மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள். வீடுவாகனத்தைசீர்செய்வீர்கள். எதிர்பார்த்திருந்த தொகை கைக்கு வரும். உத்தியோகத்தில் அதிகாரி உங்களை மதிப்பார். திடீர் திருப்பம் நிறைந்த நாள்.

**துலாம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த அலைச்சல் டென்ஷன் யாவும் நீங்கும். வியாபாரத்தில் தள்ளிப் போன வாய்ப்புகள் தேடி வரும். உத்தியோகத்தில் இழந்த உரிமையை பெறுவீர்கள். மனநிறைவு கிட்டும்.

**விருட்சிகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் நீங்கள் சிலருக்கு நல்லது சொல்லப் போய் பொல்லாப் ஆக போய் முடியும். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் பனிப்போர் வந்து நீங்கும். பொறுமை தேவைப்படும் நாள்.

**தனுசு**
விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். கல்யாண பேச்சு வார்த்தை வெற்றியடையும். வியா பாரத்தில் விஐபிகள் வாடிக்கையாளர்கள். அதிகாரிகளுக்கு உதவுவீர்கள். மகிழ்ச்சியான நாள்.

**மகரம்**
வழக்கு சாதகமாக தீர்ப்பு வரும். நெடுநாட்களாக பார்க்க நினைத்த ஒருவர் உங்களை தேடி வருவார். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்கும். உங்கள் கருத்திற்கு ஆதரவு பெருகும். தொட்டது துலங்கும்.

**கும்பம்**
பிள்ளைகளின் போக்கில் நல்ல மாற்றம் உண்டாகும். வேற்றுமதத்தவர் உதவுவார். வியாபாரத்தில் புது வேலையாட்கள் அமைவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். கனவுநனவாகும்.

**மீனம்**
பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டு. தாயாருடன் வீண் விவாதம் வந்து போகும். வியாபாரத்தில் பங்குதாரர்களின் பிரச்னை தீரும். சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள்.

# நேர்மையுடனும் கண்ணியத்துடனும் மக்களுக்கு சேவையாற்றவேண்டும்!

## புதிய அலுவலர்களுக்கு வடக்கு ஆளுநர் அறிவுரை



யாழ்ப்பாணம், மார்ச் 26

எவ்வித அரசியல் தலையீடுகளோ, இலஞ்ச ஊழல் மோசடிகளோ இன்றி மிகவும் நேர்மையான முறையில் வடக்கு மாகாண பொதுச் சேவையில் இணைந்துள்ள புதிய உத்தியோகத்தர்கள், அதே நேர்மையுடனும் கண்ணியத்துடனும் மக்களுக்குச் சிறந்த சேவையாற்ற முன்வரவேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண பொதுச் சேவையில் வெற்றிடமாகக் காணப்பட்ட 3 குடியேற்ற உத்தியோகத்தர்கள் மற்றும் 48 வாகன சாரதிகளுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன் தினம் செவ்வாய்க் கிழமை பிற்பகல் வடக்கு மாகாண பிரதம செயலாளர் அலுவலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் அதிதியாகக் கலந்துகொண்டு நியமனக் கடிதங்களை வழங்கி வைத்து உரையாற்றும் போதே ஆளுநர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய ஆளுநர்,

கடந்த சில வருடங்களாக நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடி காரணமாகப் புதிய அரச நியமனங்கள் எதுவும் வழங்கப்பட்டிருக்கவில்லை. 2020ஆம் ஆண்டு நாடு முழுவதும் சில விசேட நியமனங்கள் வழங்கப்பட்ட போதிலும், வடக்கு மாகாணம் அதில் உள்வாங்கப்பட்டிருக் கவில்லை. தற்போதைய அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் ஆட்சிக்கு வந்தவுடன் எமது மாகாணத்தில் நிலவும் ஆளணிப் பற்றாக்குறை குறித்து நாம் விரிவாகத் தெரியப்படுத்தினோம். அதன் பயனாக, கௌரவ பிரதமர் தலைமையில் விசேட குழுவொன்று அமைக்கப்பட்டு, ஆராயப்பட்ட பின்னரே தற்போது புதிய நியமனங்களை வழங்குவதற்கு அனுமதி வழங்கப்படுகின்றது.

ஆரம்பத்தில் சாரதி சேவை மற்றும் அலுவலகப் பணியாளர் சேவைகளுக்கான நியமனங்களை வழங்குவதற்கு எமக்கு அனுமதி கிடைத்திருக்கவில்லை. எனினும், கௌரவ அமைச்சர் பிமல் ரத்நாயக்க அவர்கள் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்த போது இந்த விடயங்களை அவரது கவனத்துக்குக் கொண்டு சென்றோம். அப்போது கௌரவ அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரும் உடனிருந்தார். அவர்கள் இருவரதும் தொடர்ச்சியான முயற்சியின் பலனாகவே இன்று இந்த நியமனங்களை எம்மால் வழங்கக் கூடியதாக இருக்கின்றது.

இந்த நியமனங்கள் எவ்வித அரசியல் தலையீடுகளுமின்றியும், பரிந்துரைப் பட்டியல்களுமின்றியும் உங்கள் தகுதியின் அடிப்படையில் மாத்திரமே உங்களுக்குக் கிடைத்துள்ளன. இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்திருக்காவிட்டால் இப்படி ஒரு நேர்மையான வாய்ப்பு உங்களுக்குக் கிடைத்திருக்குமா என்பது சந்தேகமே.

குறிப்பாக, சாரதி நியமனம் பெற்றுள்ள நீங்கள் அரச அதிகாரிகளைப் பொறுப்புடன் ஏற்றிச் செல்லப் போகின்றீர்கள். எனவே, நீங்கள் எப்போதும் விழிப்புடனும், சுறுசுறுப்புடனும், அதியுயர் ஒழுக்கத்துடனும் கடமையாற்ற வேண்டும். நீங்கள் ஒரு கணம் நிதானிக்கத் தவறினாலும் அது மிகப் பெரிய ஆபத்துகளை ஏற்படுத்திவிடும்.

வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை யாழ்ப்பாண மாவட்டத்தை விட ஏனைய நான்கு மாவட்டங்களிலுமே ஆளணிப் பற்றாக்குறையும், சேவையின் தேவையும் அதிகமாகக் காணப்படுகின்றது. அந்த யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு, வடக்கு மாகாணத்தின் எந்தவொரு பகுதியிலும் பணியாற்றுவதற்கு நீங்கள் எப்போதும் தயாராக இருக்க வேண்டும்" எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், வடக்கு மாகாண பிரதம செயலாளர், யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைப்பாளர் சுந்தரமூர்த்தி கபிலன், வடக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர்கள் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர். (அ)

# நல்லூர் லயன்ஸ் கழக ஏற்பாட்டில் யாழில் இலவச கண்பரிசோதனை

யாழ்ப்பாணம, மார்ச் 26

நல்லூர் லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் இலவச கண்பரிசோதனையும் மூக்குக்கண்ணாடி வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

சர்வதேச மனித உரிமைகள் அமைப்பின் யாழ்.மாவட்ட பணிப்பாளர் லயன் ரஜிகலாவின் ஒழுங்கமைப்பில் லண்டனில் வசிக்கும் நாகேஸ் பிரபாகரனின் நிதிப்பங்களிப்புடன் குறித்த நிகழ்வு மேற்கொள்ளப்பட்டது.

வைத்தியர் சந்திரகுமார் தலைமையில் கண்பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

யாழ் அரியாலை, பூம்புகார், யாழ் வண்ணார்பண்ணை, கொட்டடி, நாவலர் வீதி, திருநெல்வேலி, கே.கே.எஸ்.வீதி உள்ளிட்ட பகுதிகளிலுள்ள 130 பேருக்கு கண்பரிசோதனை செய்யப்பட்டு மூக்குக்கண்ணாடிகள் வழங்கப்பட்டன. (அ)

# நட்சத்திர விடுதியிலிருந்து மதுபான போத்தல்கள் மீட்பு

யாழ்ப்பாணம், மார்ச். 26

பண்டத்தரிப்பு - சில்லாலை பகுதியில் உள்ள நட்சத்திர விடுதியிலிருந்து நேற்று முன்தினம் 97 வெளிநாட்டு மதுபான போத்தல்கள் மீட்கப்பட்டன. இதன் போது, சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டார்.


சித்தங்கேணி மதுவரி நிலையத்தினரால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

குறித்த விடுதியில் மதுபான விற்பனைக்கான அனுமதி இல்லாத நிலையிலேயே இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இது குறித்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

(எ-05)

# முருகேசு சுவாமிகளின் குருபூஜை நிகழ்வு இன்று



வடமராட்சி, மார்ச்.25

சிறீமத் தவத்திரு வே. முருகேசு சுவாமிகளின் 29 ஆவது ஆண்டு குருபூஜை நிகழ்வு இன்று வியாழக்கிழமை காலை செல்வச்சந்நிதி ஆலய பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து சந்நிதியான் ஆச்சிரமத்தில் பக்திபூர்வமக இடம்பெறவுள்ளது.

சுவாமியால் 2000 ஆம் ஆண்டளவில் சந்நிதியான் ஆச்சிரமத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்ட அறுபத்துமூவர் குருபூசையும், நினைவுப் பேருரையும் நாளை வெள்ளிக்கிழமை இடம்பெறும் என்று சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் செ.மோகனதாஸ் சுவாமிகள் தெரிவித்துள்ளார். (அ-02)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் பொறுப்புக்கூறல் பொறிமுறை வேண்டும்!

## பாதிக்கப்பட்ட குடும்பங்கள் அறிக்கை

கொழும்பு, மார்ச் 26

இலங்கையில் காணாமல் போனோர் மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான உண்மைத்தன்மையைக் கண்டறிவதற்கும், அதற்கான பொறுப்புக்கூறல் பொறிமுறையொன்றை உருவாக்குமாறும் கோரி "காணாமல் போனவர்களின் குடும்பங்கள்" அமைப்பு புதிய அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்கவுள்ளது.

தென்பகுதிப் பெண்களின் முறைப்பாடுகளை உள்ளடக்கிய இந்த அறிக்கை, கொழும்பிலுள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் இன்று மற்றும் நாளை கையளிக்கப்படவுள்ளதாக அந்த அமைப்பின் தலைவர் பிரிட்டோ பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

காணாமல்போனோர் தொடர்பில் தற்போது முன்னெடுக்கப்படும் தேடுதல் நடவடிக்கைகளில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் குறைவாகக் காணப்படுவதாக அந்த அமைப்பு கவலை வெளியிட்டுள்ளது.

எனினும், இந்தக் குற்றச்சாட்டுகளை மறுத்துள்ள காணாமல் போனோர் பற்றிய அலுவலகத்தின் தலைவர் மகேஷ் கட்டுலந்த, விசாரணைகள் தற்போது வெளிப்படையான முறையில் முன்னெடுக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்காக சட்டத்தரணிகள் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகள் அடங்கிய 25 விசேட குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும், காணாமல் போனவர்களின் குடும்பங்கள் இந்த பொறிமுறையின் மீது நம்பிக்கை வைக்க முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ)

# இலங்கை-இந்தியா இடையே பேரிடர் முகாமைத்துவம் குறித்து ஒத்துழைப்பு

கொழும்பு, மார்ச் 26

இலங்கை மற்றும் இந்தியா இடையே பேரிடர் முகாமைத்தும் மற்றும் தயார்நிலை குறித்த ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கு இரு நாடுகளும் இணக்கம் தெரிவித்துள்ளன.

"டித்வா" புயலுக்குப் பிந்தைய மறுகட்டமைப்புப் பணிகளுக்காக இந்தியா வழங்கிய 450 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியின் ஒரு பகுதியாக இந்தத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

இதன் கீழ், பேரிடர் பாதிப்புகளை மதிப்பிடுவதற்கும், அரசுத் துறைகளை ஒருங்கிணைப்பதற்கும் ஏதுவாக நவீன புவிசார் டிஜிற்றல் தளம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மொபைல் ஒளிபரப்பு முறையிலான புதிய முன்கூட்டிய எச்சரிக்கை அமைப்பின் மாதிரிச் செயல்பாடும் வெற்றிகரமாகச் சோதித்துக் காட்டப்பட்டுள்ளது.

மேலும், நிலச்சரிவு முன்னெச்சரிக்கை மற்றும் தடுப்பு நடவடிக்கைகளில் இந்திய புவியியல் ஆய்வுத் துறை மற்றும் இலங்கையின் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் ஆகியன இணைந்து செயல்படத் தீர்மானித்துள்ளன.

இது தொடர்பாக இந்திய உயர்மட்ட நிபுணர் குழுவினர் அண்மையில் இலங்கைக்கு வருகை தந்து, தேசிய பேரிடர் மேலாண்மை மத்திய நிலையம் உள்ளிட்ட முக்கிய நிறுவனங்களுடன் விரிவான ஆலோசனைகளை நடத்தியுள்ளனர். (அ)

# பெற்றோலியக் கூட்டுத்தாபனம்-அரசு இடையே எரிபொருள் விலைச்சூத்திரம் குறித்து முரண்பாடு

கொழும்பு, மார்ச் 26

எரிபொருள் விலை அதிகரிப்பு மற்றும் விலைச் சூத்திரத்தைப் பயன்படுத்துவது தொடர்பாக அரசாங்கத்திற்கும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கும் இடையே முரண்பட்ட கருத்துக்கள் வெளியாகியுள்ளன.

சர்வதேச சந்தையில் மசகு எண்ணெய் விலை வரலாறு காணாத வகையில் உயர்ந்துள்ளதால், தற்போதைய விலை அதிகரிப்பை நடைமுறையிலுள்ள விலைச் சூத்திரத்தின் மூலம் தீர்மானிக்க முடியாது என அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

ஒரு பீப்பாய் மசகு எண்ணெயின் விலை 130 டொலராக உயர்ந்துள்ள நிலையில், சிறிய அளவிலான மாற்றங்களைக் கையாளும் விலைச் சூத்திரம் தற்போது செயலற்றதாகிவிட்டதாக அவர் சுட்டிக்காட்டினார்.

எனினும், அமைச்சரின் இந்தக் கருத்தை மறுத்துள்ள பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவ இயக்குநர் மயூர நெத்திகுமாரகே, தற்போதைய விலை மாற்றமும் விலைச் சூத்திரத்தின் அடிப்படையிலேயே கணக்கிடப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

டீசல் ஒரு லீற்றருக்கு 100 ரூபாவையும், பெற்றோல் ஒரு லீற்றருக்கு 20 ரூபாவையும் அரசாங்கம் மானியமாக ஏற்றுக் கொண்டுள்ளதால், விலைச் சூத்திரம் பயன்படுத்தப்படவில்லை என்ற குழப்பம் ஏற்பட்டிருக்கலாம் என அவர் விளக்கம் அளித்துள்ளார். (அ)

# மாகாண சபைகளுக்கான தேர்தல் மீண்டும் தள்ளிப்போகும் சூழ்நிலை!

கொழும்பு, மார்ச் 26

மாகாண சபைத் தேர்தலை நடத்துவது தொடர்பாக அரசாங்கத்திற்கும் எதிர்க்கட்சிக்கும் இடையே இணக்கப்பாடு எட்டப்படாததால், தேர்தல் மீண்டும் தள்ளிப்போகும் சூழல் உருவாகியுள்ளது.

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான பரிந்துரைகளை முன்வைக்க அமைச்சர் விஜித ஹேரத் தலைமையில் அமைக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் முதல் கூட்டம் கடந்த 17 ஆம் தேதி நடைபெற்றது.

இக்கூட்டத்தில், 2017 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட புதிய தேர்தல் முறைமையின் கீழ் எல்லை நிர்ணயப் பணிகள் பூர்த்தியடையாததே தேர்தலை நடத்துவதில் உள்ள தடையாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இது குறித்து சட்டமா அதிபர் மற்றும் தேர்தல் ஆணைக் குழுவின் ஆலோசனைகளைப் பெற வேண்டும் என அவர் முன்மொழிந்துள்ளார்.

இருப்பினும், ஒன்பது ஆண்டுகளாக மாகாண சபைகள் இயங்காததால் கல்வி மற்றும் சுகாதாரத் துறைகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இதன்போது வாதிட்டனர்.

எனவே, பழைய விகிதாசார முறையிலேயே உடனடியாகத் தேர்தலை நடத்தவேண்டும் என அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

மத்திய கிழக்கு போர்ச் சூழலால் ஏற்பட்டுள்ள எரிபொருள் விலை உயர்வு மற்றும் பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில், தேர்தலைச் சந்திக்க அஞ்சி அரசாங்கம் காலம் கடத்துவதாக எதிர்க்கட்சியினர் குற்றம்சாட்டியுள்ளனர்.

அதேநேரம், இளைஞர் மற்றும் பெண்களுக்கான பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தும் முறையான தேர்தல் கட்டமைப்பை உருவாக்குவதே தமது நோக்கம் என அரசாங்கத் தரப்பு தெரிவித்துள்ளது. (அ)

# தேயிலைக்கான கேள்வி சர்வதேசத்தில் அதிகரிப்பு

கொழும்பு, மார்ச் 26

இலங்கைத் தேயிலைக்கான கேள்வி சர்வதேச சந்தையில் கணிசமாக அதிகரித்துள்ளதாக இலங்கைத் தேயிலை சபையின் தலைவர் ராஜ் ஒபேசேகர தெரிவித்துள்ளார்.

மத்திய கிழக்கு நாடுகளில் நிலவும் போர்ப் பதற்றங்களுக்கு மத்தியிலும் இந்த வளர்ச்சி ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

கடந்த வார ஏலத்தில் ஒரு கிலோ தேயிலையின் சராசரி விற்பனை விலை 1,153 ரூபாவாகப் பதிவாகியுள்ளது. தற்போது ஏலத்தில் விற்பனையாகாத தேயிலையின் அளவு 8 வீதம் முதல் 10 வீதம் வரை மாத்திரமே காணப்படுகின்றது.

ஹோர்முஸ் நீரிணை மூடப்பட்டமை மற்றும் பிராந்திய மோதல்கள் காரணமாக குவைத், சவூதி அரேபியா மற்றும் ஈரான் போன்ற நாடுகளுக்கான ஏற்றுமதி பாதிக்கப்பட்டது.

எனினும், தேயிலை சபை எடுத்துள்ள துரித நடவடிக்கையினால் துருக்கி மற்றும் ஈராக் போன்ற நாடுகளுக்கு மாற்று கடல் வழித்தடங்கள் ஊடாக ஏற்றுமதி வெற்றிகரமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பில் 38,274 ஹெக்ரேயரில் இம்முறை சிறுபோக நெற்செய்கை!

மட்டக்களப்பு, மார்ச் 26

மட்டக்களப்பு மாவட்டத்தில் இம்முறை சிறுபோக நெற்செய்கை 38,274 ஹெக்ரேயர் மேற்கொள்ளப்பட உள்ளது

மட்டக்களப்பு மாவட்டத்தில் இவ்வாண்டுக்கான சிறுபோக நெற் செய்கைக்கான ஆயத்தப் பணிகள் தற்போது விவசாயிகளினால் படுவான்கரைப் பகுதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஜனாதிபதியின் விசேட உத்தரவின் பெயரில் கிழக்கு மாகாணத்தில் விவசாய அமைச்சினால் விவசாயிகளுக்குரிய பசளைகளை தங்கு தடை இன்றி வழங்குவதற்கான சகல நடவடிக்கைகளும் மாவட்ட உர செயலகத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ளதை அடுத்து

மாவட்டத்தில் விவசாயிகள் தங்களது விவசாயக் காணிகளை உள வடித்தல், வரம்பு கட்டுதல், நீர்ப்பாசன வாய்க்கால்களை துப்புரவு செய்தல், பாதுகாப்பு வேலி அமைத்தல் போன்ற முன்னாயத்தப் பணிகளில் தற்போது ஈடுபட்டு வருகின்றனர்.

இம்முறை மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகளுக்கு சிறுபோக நெற்செய்கைக்கு தேவையான 7234 மெற்றிக் தொன் யூரியா 1078 மெற்றிக் தொன் ரி.எஸ்.பி., 1709 மெற்றிக் தொன் எம்.ஓ.பி. உரப்பசளைகளை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

(அ)

# சிரேஷ்ட ஊடகவியலாளர் ஏ.எல்.எம்.சலீம் காலமானார்



அம்பாறை, மார்ச் 26

நிந்தவூரைப் பிறப்பிடமாகக் கொண்ட சிரேஷ்ட ஊடகவியலாளர் கலாபூசணம் ஏ.எல்.எம். சலீம் நேற்று காலை 8 மணியளவில் தனது 75ஆவது வயதில் நிந்தவூர் இல்லத்தில் காலமானார்.

இவர் ஓய்வுபெற்ற வைத்திய அதிகாரி ஜெஸ்மின் சலீமின் அன்புத் துணைவியாரும், அகீலா, அகீல் ஆகியோரின் பாசமுள்ள தந்தையுமானவர்.

தினபதி, சிந்தாமணி, வீரகேசரி, தினக்குரல், தினகரன் உள்ளிட்ட பல பத்திரிகைளினது பிராந்திய செய்தியாளராகவும் கடமையாற்றிய இவர், ஒரு சிறந்த ஆய்வுக் கட்டுரையாளருமாவார்.

சுமார் 50 வருடங்களுக்கும் மேலாக ஊடகப் பணி செய்தவர். ஊடகவியலாளர்கள் மத்தியில் மிகுந்த மதிப்பையும், மரியாதையும் பெற்றிருந்த இவர், எழுத்தை ஆளுகை செய்த ஆளுமையாகவும் திகழ்கின்றார்.

அன்னாரின் ஜனாஸா நல்லடக்கம் நேற்று இஷாவிற்கு பின்னர் நிந்தவூர் ரவாஹா பொது மையானத்தில் இடம்பெற்றது.

# டி.எஸ்.சேனாநாயக்கவின் நினைவு அம்பாறையில்



அம்பாறை, மார்ச் 26

இலங்கையின் முதல் பிரதமர் டி. எஸ். சேனாநாயக்கவின் 74 ஆவது நினைவு தினம் அம்பாறை மாவட்டத்தில் மிகவும் சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டது.

அம்பாறை மக்களின் நீர்த் தேவையை நிறைவேற்றிய காலத்தால் அழியாத தலைவராகப் போற்றப்படும் அவரது நினைவாக, இங்கினியாகலையில் அமைந்துள்ள கல்ஓயா நீர்த்தேக் கத் திட்டம் அருகிலுள்ள அவரது உருவச்சிலைக்கு மலர் மாலை அணி வித்து ஆன்மீக நிகழ்வுகள் இடம்பெற்றன.

நிகழ்வின் தொடக்கமாக அம்பாறை டி.எஸ். சேனாநாயக்க தேசிய பாடசாலை வளாகத்தில் அமைந்துள்ள அவரது உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டது. தொடர்ந்து அம்பாறை நகர கடிகாரக் கோபுரம் அருகிலுள்ள உருவச்சிலைக்கும் மரியாதை செலுத்தப்பட்டது. பின்னர் இங்கினியாகலையில் அமைந்துள்ள கல்ஓயா நீர்த்தேக்கத் திட்டம் அருகிலுள்ள உருவச்சிலையடியிலும் நிகழ்வுகள் நடைபெற்றன.

# அஸ்வெசும மார்ச் மாத கொடுப்பனவு இன்று முதல்

கொழும்பு, மார்ச் 26

அஸ்வெசும நலன்புரித் திட்டத்தின் கீழ், 70 வயதிற்கு மேற்பட்ட சிரேஷ்ட பிரஜைகளுக்கான மார்ச் மாதக் கொடுப்பனவுகள் இன்று முதல் வழங்கப்படும் என நலன்புரி நன்மைகள் சபை அறிவித்துள்ளது.

இதன்படி முதற்கட்டமாக 70 வயதிற்கு மேற்பட்ட 622,462 முதியோர்களுக்கு மார்ச் மாதத்திற்கான கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

இதற்காக அரசாங்கம் 3.1 பில்லியன் ரூபாயை ஒதுக்கியுள்ளது.

இதனையடுத்து இரண்டாம் கட்டத்தின் கீழ் தகுதி பெற்ற 71,339 முதியோர்களுக்கு மொத்தம் 356 மில்லியன் ரூபாய் வழங்கப்படவுள்ளது.

இந்த நிதியானது பயனாளிகளின் வங்கிக் கணக்குகளில் இன்று நேரடியாக வரவு வைக்கப்படும் எனச் சபை தெரிவித்துள்ளது.

தகுதியுடைய முதியோர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர், மார்ச் 26ஆம் திகதி முதல் தத்தமது வங்கி கணக்குகளின் ஊடாக "அஸ்வெசும" நன்மைகளை பெற்றுக்கொள்ள முடியும் என நலன்புரி நன்மைகள் சபை தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. (அ)

# திருகோணமலை மாநகர சபை வளாகத்தில் மாநகர சுற்றுலா தகவல் வழங்கும் நிலையம்

திருமலை, மார்ச் 26

திருகோணமலை மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள டச்சுக்குடா கடற்கரையை அண்மித்த பகுதியில், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளை ஈர்க்கவும், நாட்டின் அன்னியச் செலாவணியை அதிகரிக்கவும், மாநகரத்தில் சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் நோக்கில் பல்வேறு முக்கிய வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அத்திட்டங்களின் ஒரு பகுதியாக, கிழக்கு மாகாண சுற்றுலா பணியகத்தின் நிதியுதவியுடன், மாநகர சபை வளாகத்தில் மாநகர சுற்றுலா தகவல் வழங்கும் நிலையம் நிறுவப்பட்டுள்ளது. இந்நிலையம் நேற்று முன் தினம் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.



இந்நிகழ்வு திருகோணமலை மாநகர சபையின் முதல்வர் க. செல்வராஜா தலைமையில் நடைபெற்றது.

இதில் உப முதல்வர், உறுப்பினர்கள், மாநகர ஆணையாளர் உ. சிவராசா, நிர்வாக உத்தியோகத்தர், வேலை அத்தியட்சகர், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊ[illegible] சிறப்பித்[illegible] (அ)

# உலக காசநோய் தின விழிப்புணர்வு நடைபவனியும் விசேட கருத்தரங்கும்



சம்மாந்துறை, மார்ச். 26

உலக காசநோய் தினத்தை முன்னிட்டு, கல்முனை பிராந்தியத்தில் பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலான விசேட நடைபவனியும் கருத்தரங்கும் நேற்று முன் தினம் சம்மாந்துறையில் நடைபெற்றன.

கல்முனை பிராந்திய மார்பு நோய் சிகிச்சை சம்மாந்துறை நிலையத்தின் பொறுப்பதிகாரி அப்துல் கபூர் தலைமையில் இந்த நிகழ்வுகள் ஒருங்கிணைக்கப்பட்டன.

இந்த நிகழ்வின் ஆரம்பமாக, காசநோய் ஒழிப்பு மற்றும் அதன் அறிகுறிகள் தொடர்பான விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு சுகாதாரத் துறையினரின் விழிப்புணர்வு நடைபவனி முன்னெடுக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, கல்முனை பிராந்திய மார்பு நோய் சிகிச்சை நிலைய கூட்ட மண்டபத்தில் விசேட கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது.

காசநோயை ஆரம்பத்திலேயே கண்டறிவதன் முக்கியத்துவம் மற்றும் அதற்கான முறையான சிகிச்சைகள் குறித்து இதன் போது விரிவாக விளக்கமளிக்கப்பட்டது. (எ)

# நானுஓயாவில் காட்டுத் தீ

நுவரெலியா, மார்ச் 26

நுவரெலியா ஒலிபண்ட் பகுதியில் நேற்று முன் தினம் இரவு ஏற்பட்ட தீ வேகமாகப் பரவி வருவதாக தெரிவிக்கப்பட்டது.

இந்த காட்டுத்தீ தோட்டத்திற்கு மேல் பகுதியில் உள்ள நடு காட்டுப் பகுதிக்கு பரவியுள்ளது.

இதனால் அந்தப்பகுதி முழுவதும் கரும்புகை மூட்டமாக காட்சியளித்து வருகிறது.

இவ்வாறான சம்பவங்கள் சிலரின் திட்டமிட்ட செயலாகும்.

காட்டுப் பகுதிகளில் வசிக்கும் விலங்குகளை வேட்டையாடுவதற்காக தீ வைப்பு சம்பவங்கள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

தற்போது வெயிலின் தாக்கம் கடுமையாக அதிகரித்து வரும் நிலையில் மலையகத்தில் ஆங்காங்கே இதுபோன்ற தீப்பரவல் சம்பவங்கள் பதிவாகின்றன.

# வேலோடுமலை முருகன் ஆலய கொடியேற்றம் இன்று



அம்பாறை, மார்ச் 26

"ஈழத்து பழநி" என அழைக்கப்படும் கிழக்கின் சித்தாண்டி இலுக்குப்பொத்தானை வேலோடுமலை முருகன் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவ கொடியேற்றம் இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

ஆலய பரிபாலன சபைத் தலைவர் முருக பக்தர் சுப்பிரமணியம் தியாகராஜா தலைமையில் மகோற்சவகால குரு சிவ சிறீ சுபா பாஸ்கர குருக்கள் அலங்கார உற்சவத்தை நடத்தவிருக்கிறார்.

கொடியேற்றத் திருவிழாவுக்காக சித்தாண்டி மக்கள் சித்தாண்டிலியிருந்து 14 கிலோ மீற்றர் தூரம் பாதயாத்திரையாக வேலோடுமலையை வந்தடையவுள்ளனர்.

எதிர்வரும் ஏப்ரல் முதலாம் திகதி புதன்கிழமை தீர்த்தோற்சவத்துடன் அலங்கார உற்சவம் நிறைவடைய இருக்கிறது.

உற்சவ காலப்பகுதியில் தினமும் காலை மற்றும் மாலை நேரங்களில் விசேட பூஜைகள், அபிஷேகங்கள், தேவாரப் பாடல்கள், பக்தி நிகழ்ச்சிகள் ஆகியவை நடைபெறும்.

(அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## யாழ். பல்கலையின்...

பல்கலைக்கழகத்தினுள் அமைந்துள்ள ஸ்ரீ பார்வதி சமேத பரமேஸ்வரன் ஆலயத்தில் நடைபெற்ற விசேட அபிஷேக, ஆராதனைகளைத் தொடர்ந்து மக்கள வாத்தியம் முழங்க அழைத்து வரப்பட்ட பேராசிரியர் தி.வேல்நம்பி துணைவேந்தர் அலுவலகத்தில் உத்தியோகபூர்வ ஆவணத்தில் கையெழுத்திட்டுத் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இந்த நிகழ்வில் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர், பதிவாளர், பீடாதிபதிகள், பேரவை உறுப்பினர்கள், நிதியாளர், நூலகர், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ஓ)

## அமெரிக்கா...

விரும்புகிறதோ மற்றும் அதன் நிபந்தனைகள் எப்போது நிறைவேற்றப்படுகிறதோ, அப்போதுதான் போர் முடிவுக்கு வரும்" என அந்த அதிகாரி திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

எதிரிக்கு பலத்த அடிகளைத் தொடர்ந்து கொடுத்து, ஈரானின் கோரிக்கைகள் நிறைவேறும் வரை தற்காப்பு நடவடிக்கைகள் தொடரும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

வோஷிங்டன் பல்வேறு இராஜதந்திர வழிகளில் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்தாலும், அவை யதார்த்தத்திற்குப் புறம்பானவை என ஈரான் கருதுகின்றது.

2025 ஆம் ஆண்டு வசந்த காலம் மற்றும் குளிர்காலத்தில் நடைபெற்ற முந்தைய பேச்சுவார்த்தைகளை ஈரானிய அதிகாரி "ஏமாற்று வேலை" என்று விமர்சித்துள்ளார்.

அந்த சமயங்களில் அமெரிக்காவிற்கு உண்மையான பேச்சுவார்த்தையில் ஈடுபாடு இருக்கவில்லை என்றும், மாறாக ஈரான் மீது இராணுவத் தாக்குதல்களை நடத்தியதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஈரான் போரை நிறுத்த வேண்டுமானால் பின்வரும் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் எதிரி தரப்பிலிருந்து முன்னெடுக்கப்படும் அனைத்து வகையான தாக்குதல்கள் மற்றும் இலக்கு வைக்கப்பட்ட படுகொலைகள் முற்றாக நிறுத்தப்பட வேண்டும். இஸ்லாமியக் குடியரசு மீது மீண்டும் ஒரு போர் திணிக்கப் படாது என்பதை உறுதிப்படுத்த முறையான வழிமுறைகள் உருவாக்கப்பட வேண்டும்.

போரினால் ஏற்பட்ட சேதங்களுக்கான இழப்பீட்டுத் தொகை முறையாக வழங்கப்பட வேண்டும்.

பிராந்தியத்தில் உள்ள அனைத்து எதிர்ப்பு குழுக்களுக்கும் எதிராக முன்னெடுக்கப்படும் போர்கள் அனைத்து முனைகளிலும் நிறுத்தப்பட வேண்டும்.

ஹோர்முஸ் நீரிணையின் மீது ஈரானுக்குள்ள இறையாண்மை மற்றும் அதிகாரத்தை சர்வதேச அளவில் அங்கீகரிக்க வேண்டும்.

இந்த சட்டவிரோதப் போர் கடந்த பெப்ரவரி 28 ஆம் திகதி, அணுசக்தி பேச்சுவார்த்தைகள் நடந்து கொண்டிருந்த போதே, ஈரானிய புரட்சியின் தலைவர் அயதுல்லா அலி கமேனி மற்றும் உயர்மட்ட இராணுவ அதிகாரிகள்கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து தொடங்கியது.

இதற்குப் பதிலடியாக, ஈரானியப் படைகள் பிராந்தியத்தில் உள்ள அமெரிக்க மற்றும் இஸ்ரேலிய இராணுவ இலக்குகள் மீது இதுவரை சுமார் 80 கட்டத் தாக்குதல்களை நடத்தியுள்ளன. ஈரானின் அனைத்து நிபந்தனைகளும் ஏற்றுக்கொள்ளப் படும் வரை எவ்வித பேச்சுவார்த்தையும் நடைபெறாது என அந்த அதிகாரி மீண்டும் வலியுறுத்தியுள்ளார். (அ)

## வனஜீவராசிகள்...

சேதத்தை நேற்று பார்வையிட்ட பின்பே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

கடந்த 20ஆம் திகதி குமார் என்பவரின் கரைவலைவாடிக்கு வருகை தந்த ஐந்திற்கும் மேற்பட்ட யானைகள் 36 தென்னைகளை நாசமாக்கியதாக கேள்விப்பட்டு நிலைமைகளை பார்வையிட இங்கே வருகை தந்தேன்.

நான் அறிந்தவரை குறித்த பகுதியில் வசிக்கும் மக்களுக்கு இதுவரையான காலப்பகுதியில் இவ்வாறான ஒரு சம்பவம் இடம்பெறவே இல்லை. முதல் தடவையாக காட்டு யானைகள் வந்து பெருமளவான தென்னைகளை நாசம் செய்துள்ளன.

இந்த இழப்பு ஈடு செய்ய முடியாத இழப்பு. ஆகவேதான் அதனை பார்வையிட பங்குத்தந்தை என்னும் ரீதியில் இங்கே வருகை தந்துள்ளேன்.

இதெல்லாம் எங்கள் மக்கள் காலாகாலம் வாழ்ந்த அவர்களுடைய பூர்வீக காணிகள். மக்கள் தற்போதும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற காணிகளை எல்லாம் தேசிய பூங்கா என்று கூறி கடந்த கால அரசாங்கங்களும் தற் போதைய அரசாங்கமும் அடையாளப்படுத்தி, ஆக்கிரமிப்பு செய்கின்ற ஒரு கைங்கரியத்தை தான் இங்கே செய்து கொண்டிருக்கிறார்கள்.

இதைத்தான் நாங்கள் மீண்டும் மீண்டும் வலியுறுத்தி கூறுகிறோம். 2009ஆம் ஆண்டுக்கு பிற்பாடு கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலை வடக்கு - கிழக்கிலே நடந்து கொண்டிருக்கின்றது. அரச திணைக்களங்கள் ஊடாக இந்த கைங்கரியங்கள் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன.

இந்த பிரதேசத்திற்கும்,வனஜீவராசிகள் திணைக்களத்திற்கும் எந்த விதமான தொடர்பும் இல்லை.

இங்கே காட்டு விலங்குகள் இல்லை, அடர்ந்த காடுகள் இல்லை, இந்த பகுதி வனஜீவராசிகள் திணைக்களத்தினுடைய பகுதி என்று கூறிக் கொள்வதற்கான எந்த சான்றுகளும் இல்லை.

எனவே தான் கிராம மக்களுக்கு எழுகின்ற சந்தேகம் எனக்கும் இருக்கின்றது. இந்த பகுதிக்குள் யானைகளை திட்டமிட்டு கொண்டு வந்து விட்டு இந்த பகுதியில் யானைகள் வசிக்கின்ற இடம், இது தேசிய பூங்கா என்பதனை ஊர்ஜிதம் செய்வதற்காக இந்த காரியங்களை இவர்கள் செய்திருக்கக்கூடும்.

இதில் ஆச்சரியப்படுவதற்கு எதுவும் இல்லை வரலாற்றில் இவர்கள் இவ்வாறு பல விடயங்களை செய்திருக்கிறார்கள்.

எங்களுடைய காணிகள் இவ்வாறு தான் அபகரிக்கப்பட்டு வருகின்றன. சம்பந்தமே இல்லாமல் மக்களுடைய பூர்வீக காணிகளை கையகப்படுத்தி வைத்திருக்கும் வனஜீவராசிகள் திணைக்களம் மக்களுடைய காணிகளை உடனடியாக கையளிக்கவேண்டும். குறித்த வர்த்தமானி முற்று முழுதாக அகற்றப்பட வேண் டும் - என்றார். (அ)

## வடக்கு விவசாயிகளின்...

உயர் மட்டக் குழுவினர் மற்றும் வடக்கு மாகாண விவசாயத் திணை க்கள அதிகாரிகள் பங்கேற்ற இந்தக் கலந்துரை யாடல், சுமார் 4 மணிநேரம் இடம்பெற்றது.

மாகாண விவசாயத் துறையின் தற்போதைய சவால்கள், எதிர்காலத் திட்டங்கள் மற்றும் கொள்கை ரீதியான தீர்மானங்கள் குறித்து ஆராயப்பட்டது. ஆளுநர் கருத்து வெளியிடுகையில், வடக்கு மாகாண விவசாயிகள் எதிர்நோக்கும் தனித்துவமான சவால்களை சுட்டிக்காட்டினார்.

தொடர்ந்து உரையாற்றிய தேசிய விவசாயப் பணிப்பாளர் நாயகம் விக்கிரமராச்சி, தேசிய விவசாய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்கும் மாகாண நிகழ்ச்சித் திட்டத்திற்கும் இடையிலான இடை வெளியைக் குறைப்பதே பிரதான நோக்கம் எனத் தெரிவித்தார்.

தேசிய விவசாயத் திணைக்களத்தின் "எட்டுத் தூண்கள்" வேலைத் திட்டத்தின் கீழ், வடக்கின் விவசாயத்தை எவ்வாறு மேம்படுத்துவது என்பது தொடர்பான விரிவான விளக்கத்தை, மாகாணப் பணிப்பாளர் மேற்கொண்டார்.

வடக்கு மாகாண விவசாயப் பணிப்பாளரால் முன்வைகசுப்பட்ட விசேட சமர்ப்பணத்தில், மாகாணத்திலுள்ள ஒரு இலட்சத்து 49 ஆயிரத்து 136 விவசாயக் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான தேவைகள் சுட்டிக்காட்டப்பட்டன.

குறிப்பாக, வாழையில் பனாமா நோய், கொடித்தொடையில் வாடல் நோய், பார்த்தீனியகளை, தென்னை வெள்ளை ஈ மற்றும் நெற் செய்கையில் களை நெல் போன்ற அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதற்குரிய, "உயிரியல் கட்டுப்பாட்டு முகவர்களை" உற்பத்தி செய்யும் நிலையங்களை மாகாணத்திற்குள் நிறுவுதல், யாழ்ப்பாணத்தில் உருளைக்கிழங்குச் செய்கையை ஊக்குவித்தல் மற்றும் மாகாணத்திற்குள் "இழைய வளர்ப்பு" ஆய்வுகூடங்களை அமைத்தல் போன்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

அத்துடன், அனுமதிக்கப்பட்ட ஆளணிக்கும் தற்போது சேவையிலுள்ள ஆளணிக்கும் இடையிலான இடைவெளி தரவுகளுடன் சுட்டிக்காட்டப்பட்டது.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் அதிகளவில் உற்பத்தி செய்யப்படும் பாரம்பரிய "ஆட்டக்காரி" நெல்லினத்திற்கு விவசாயத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ பரிந்துரை இதுவரை இல்லாத காரணத்தால், அதற்கான நியாயமான நிர்ணய விலையைத் தீர்மானிப்பதிலும், விவசாயக் காப்புறுதியைப் பெற்றுக் கொள்வதிலும் விவசாயிகள் சிக்கல்களை எதிர்கொண்டு வந்தனர்.

இந்த நீண்ட காலப் பிரச்னை ஆராயப்பட்டதுடன் ஆட்டக்காரியை ஒரு "பிராந்திய நெல்லினமாக" உடனடியாகப் பரிந்துரைப்பதற்கான சாதகமான நடவடிக்கைகளை எடுப்பதாக, தேசிய விவசாயப் பணிப்பாளர் நாயகம் உறுதியளித்தார்.

வடக்கு மாகாணத்தின் ஊடான ஏற்றுமதிகளை ஊக்குவிப்பதற்கும், நோய்த்தாக்கங்களைக் கட்டுப்படுத்துவதற்கும், யாழ்ப்பா ணம் சர்வதேச விமான நிலையம் மற்றும் காங்கேசன்துறை துறைமுகம் ஆகியவற்றை மையப்படுத்திய, "தாவர தனிமைப்படுத்தல் அலுவலகத்தை" முழுமையாக இயங்கச் செய்வது தொடர்பில் ஆராயப்பட்டது.

இந்தியாவில் இருந்து கொண்டுவரப்படும் வாழைக் கன்றுகள் ஊடாக, "பனாமா" போன்ற கொடிய நோய்கள் பரவும் அபாயம் உள்ளதால், சுங்க அதிகாரிகளுடன் இணைந்து கடுமையான கண்காணிப்புகளை மேற்கொள்ளவும், ஏற்றுமதியாளர்களுக்கு இலகுவாகச் சான்றிதழ்களை வழங்குவதற்குமான வசதிகளை மேம்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டது.

விதைச் சான்றிதழ்களைப் பெறுவதற்காக, வடக்கில் இருந்து தெற்குக்கு விதைகளை அனுப்பி விட்டு, மாதக்கணக்கில் காத்திருக்கும் நிலையை மாற்றுவதற்காக, வடக்கு மாகாணத்திற்குள்ளேயே "விதைப் பரிசோதனைச் சிறிய ஆய்வுகூடங்களை" விரைவாக நிறுவுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது.

இளைஞர்களை விவசாயத்திற்குள் ஈர்ப்பதற்காக, பரந்தன் மற்றும் வவுனியா விவசாயக் கல்லூரிகளில் டிப்ளோமா கற்கை நெறிகளை விரிவுபடுத்தல், இளைஞர்களுக்கான 4 சத வீத குறைந்த வட்டியிலான கடன் திட்டங்களை இலகுபடுத்தல் மற்றும் பயன்படுத்தப்படாத அரச காணிகளை இளைஞர்களின் விவசாய முயற்சிகளுக்கு வழங்குதல் தொடர்பிலும், கொள்கை ரீதியாக ஆராயப்பட்டது.

அனுமதியற்ற மற்றும் காலாவதியான விவசாய இரசாயனங்கள் சந்தையில் விற்கப்படுவதைக் கடுமையாக கட்டுப்படுத்தவும், அவ்வாறு ஈடுபடும் வர்த்தக நிலையங்களின் பதிவுகளை உடனடியாக இரத்துச் செய்யுமாறும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டது.(அ)

## திறைசேரியை...

நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர், நெருக்கடிகள் ஏற்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஜனாதிபதியும் தற்போதைய அரசாங்கமும் கவர்ச்சிகரமான வார்த்தைகளையும் பொய்களையும் பயன்படுத்தி, அந்தப் பழிப்பாவங்களை மக்கள் மீது சுமத்திவிட்டு தீர்வின்றி தவிக்க விடுவதையே வழக்கமாகக் கொண்டுள்ளனர் என்று குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க எதிர்க்கட்சியில் இருந்தபோது ஆற்றிய உரைகளுக்கும், இன்று அவர் வகிக்கும் ஜனாதிபதி பதவியின் செயற்பாடுகளுக்கும் இடையில் பாரிய முரண்பாடு காணப்படுவதாக அவர் சுட்டிக்காட்டினார். மக்கள் இன்று இந்த முரண்பாட்டால் பெரும் குழப்பத் திற்கு உள்ளாகியுள்ளனர். அன்று 3 வீதமாக இருந்த ஜே.வி.பி-யின் வாக்கு வங்கியை 42 வீதமாக உயர்த்த அவர்கள் கையாண்ட ஒரே உத்தி, முந்தைய ஆட்சியாளர்கள் மீது மக்கள் மத்தியில் குரோதத்தையும் வெறுப்பையும் விதைப் பதுதான்.

தற்போதைய நெருக்கடிகளுக்கு யுத்தம் அல்லது இயற்கைச் சீற்றங்களை அரசாங்கம் காரணமாகக் காட்ட முயன்றாலும், நிர்வாகத் திறமையின்மை, அகங்காரம், பொய் மற்றும் முறையற்ற மேலாண்மை ஆகியவையே தற்போதைய மக்களின் துயரங்களுக்குக் காரணம் என்பதை மக்கள் நன்கு உணர்ந்துள்ளனர்.

அரசாங்கம் பொருளாதார இலக்குகளை எட்டிவிட்டதாகவும், திறைசேரி நிரம்பி வழிகிறது என்றும், கடந்த ஆண்டே அதிக வரி வசூலிக்கப்பட்ட ஆண்டு என்றும் பெருமை பேசுகிறது. அவ்வாறாயின், தேர்தல் மேடைகளில் வழங்கிய வாக்குறுதிகளின்படி உணவு, மருந்து, கல்வி உபகரணங்கள் மற்றும் எரிபொருட்களுக்கான வரிகளைக் குறைத்து மக்களுக்கு ஏன் நிவாரணம் வழங்க முடியாது என அவர் கேள்வி எழுப்பி னார். (அ)

## அரச சேவைகளை...

குறித்தும் இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

பொதுநிர்வாகம், சுகாதாரம், கல்வி மற்றும் நீதி ஆகிய முக்கிய அமைச்சுகளின் சேவைகளைத் தொடர்ச்சியாகவும் வினைத்திறனாகவும் முன்னெடுத்துச் செல்வது குறித்து ஆலோசிக்கப்பட்டது.

குறிப்பாக, திட்டமிட்டபடி பரீட்சைகளை நடத்துவதற்கும், வைத்தியசாலைகளுக்குத் தேவையான மருந்துப் பொருள்களைத் தடையின்றி விநியோகிப்பதை உறுதி செய்வதற்கும் இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

பயணிகள் போக்குவரத்துச் சேவைகள் மற்றும் ரயில் போக்குவரத்துத் துறையில் நிலவும் சவால்கள் குறித்து ஆராயப்பட்டதுடன், எதிர்காலத் திட்டங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

மேலும், அத்தியாவசியப் பொருள்களின் போக்குவரத்தை தடையின்றி மேற்கொள்வதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

அரச சேவைகளை விரைவுபடுத்துவதற்காக "டிஜிற்றல்" சேவை கட்டமைப்புகளை அறிமுகப்படுத்தவும், வீட்டிலிருந்து பணியாற்றும் முறைமையை மேம்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டது. இந்த நடவடிக்கைகளை டிஜிற்றல் பொருளாதார அமைச்சின் கீழ் கண்காணிப்பதற்கும் ஆலோசிக்கப்பட்டது.

அனைத்து அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களின் தற்போதைய வலுசக்தி முகாமைத்துவ நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்து, தேவையான கொள்கை மாற்றங்களை மேற்கொள்ளுமாறு இதன்போது பிரதமர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கினார். (அ)

## பிரதமர் பங்கேற்ற...

சந்திப்பில் கலந்துகொள்ளவில்லை.

இது குறித்து ஊடகங்களில் செய்திகள் வெளியானதை அடுத்து, தங்காலை வலயக் கல்விப் பணிப்பாளர் அனைத்துப் பாடசாலை அதிபர்களுக்கும் உத்தியோகபூர்வ கடிதங்களை அனுப்பியுள்ளார்.

குறித்த கூட்டத்திற்கு ஆசிரியர்கள் சமூகமளிக்காததற்கான காரணங்களை தெளிவுபடுத்தி, மார்ச் 26ஆம் திகதிக்கு முன்னர் அறிக்கைகளை சமர்ப்பிக்குமாறு அனைத்து அதிபர்களுக்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

அரசு இயந்திரத்தின் செயற்பாடுகள் மற்றும் கல்வித்துறை சார்ந்த விடயங்கள் குறித்து கலந்துரையாடுவதற்காகவே பிரதமரின் தலைமையில் இந்த கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

எனினும், பெருமளவிலான ஆசிரியர்கள் இதில் பங்கேற்கத் தவறியமை நிர்வாக ரீதியான அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிகிறது. (அ)

## மணற்காட்டில்...

முறைப்பாட்டின் அடிப்படையில் தாக்குதலில் காயமடைந்த மூவரிடமும் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண அதிகா ரிகள் மந்திகை வைத்தியசாலையில் வைத்து வாக்குமூலங்களை பதிவு செய்துள்ளனர். (அ)

## சுரேஷ் சாலே...

காரணமாக கொழும்பு தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

முக்கியமான விசாரணைகள் நிமித்தம் கைது செய்யப்பட்டு, தடுத்து வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வந்த நிலையில், அவருக்கு ஏற்பட்ட திடீர் உடல்நலக் குறைவுகாரணமாக தற்போது அவர் கொழும்பு தேசிய மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெற்று வருகின்றார்.

மேலதிக பரிசோதனைகள் மற்றும் சிகிச்சைகளின் பின்னர் அவரது உடல்நிலை குறித்து மருத்துவ அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன. (அ)

ஈழநாடு
Eelanadu

# மருந்துகளின் விலைகள் உச்சத்தை எட்ட வாய்ப்பு

கொழும்பு, மார்ச் 26
மத்திய கிழக்கில் நிலவும் போர் பதற்றம், வெளிநாட்டு செலாவணி தட்டுப்பாடு, எரிபொருள் விலை உயர்வு மற்றும் ஏனைய சேவைகளின் கட்டண அதிகரிப்பு காரணமாக, உள்நாட்டு சந்தையில் மருந்துப் பொருட்களின் விலைகள் அதிகரிப்பது தவிர்க்க முடியாமல் போகலாம் என மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான மருந்து சங்கங்களின் கூட்டமைப்பின் தலைவர் விசேட மருந்துவ நிபுணர் சமல் சஞ்சீவ தெரிவித்துள்ளார்.

அதிகரித்து வரும் செலவுகளுக்கு ஏற்ப மருந்து இறக்குமதியாளர்களும், உள்ளூர் உற்பத்தியாளர்களும் விலைகளை திருத்தம் செய்வது குறித்து ஏற்கனவே கவனம் செலுத்தி வருவதால், எதிர்காலத்தில் மருந்து விலைகள் கணிசமாக உயரக்கூடும் என அவர் சுட்டிக் காட்டினார்.

ஏற்கனவே அத்தியாவசிய மருந்துகளின் விலைகள் உயர்ந்துள்ள நிலையில், மேலதிக விலை உயர்வு ஏற்பட்டால் நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம், இதய நோய், சிறுநீரக நோய் மற்றும் மனநல பாதிப்புகளுக்கு நீண்டகால சிகிச்சை பெற்று வரும் நோயாளிகள் மிக மோசமாக பாதிக்கப்படுவர்.

மேலும், அரசாங்கம் மருந்துக் கட்டுப்பாட்டு விலைகளை வர்த்தமானி மூலம் அறிவித்திருந்தாலும், சில மருந்தகங்கள் நிர்ணயிக்கப்பட்ட விலையை விட அதிக விலைக்கு மருந்துகளை விற்பனை செய்வதாக மருத்துவர் சமல் சஞ்சீவ குற்றம் சுமத்தினார். (அ)

## ஈரானின் எரிபொருள் உதவியை பெறுவதில் இலங்கைக்கு சிக்கல்!

கொழும்பு, மார்ச் 26
இலங்கைக்குத் தேவையான மசகு எண்ணெய் மற்றும் அத்தியாவசியப் பொருட்களை வழங்கத் தயாராக இருப்பதாக ஈரான் விடுத்த அழைப்பிற்கு இலங்கை அரசாங்கம் தனது நன்றியினைத் தெரிவித்துள்ளதுடன், அதனைப் பெற்றுக்கொள்வதில் உள்ள நடைமுறைச் சிக்கல்கள் குறித்தும் விளக்கமளித்துள்ளது.

இலங்கையிடமிருந்து உத்தியோகபூர்வ கோரிக்கை விடுக்கப்படும் பட்சத்தில், மசகு எண்ணெய் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை வழங்கத் தயாராக இருப்பதாக இலங்கையிலுள்ள ஈரான் தூதுவர் அலிரேசா டெல்கோஷ் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் இது குறித்து அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவிக்கையில்-

ஈரானின் இந்தத் தாராளமான முன்மொழிவை இலங்கை அரசாங்கம் பெரிதும் மதிக்கிறது.

சொந்தமாகச் சரக்குக் கப்பல்களைக் கொண்ட நாடுகளே இவ்வாறான வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ள முடியும். துரதிஷ்டவசமாக, ஈரானில் இருந்து எரிபொருளை இறக்குமதி செய்வதற்குத் தேவையான வசதிகளோ அல்லது சொந்தமான கப்பல்களோ தற்போது இலங்கையிடம் இல்லை- என்றார்.

ஈரானின் சலுகையைப் பயன்படுத்துவதில் உள்ள தொழில்நுட்ப மற்றும் போக்குவரத்து ரீதியான இயலாமையை அவர் இதன்போது சுட்டிக்காட்டினார். (அ)

## அடுத்த மாதம் வரை கடும் வெப்பநிலை!

கொழும்பு, மார்ச் 26
நாட்டில் மனித உடலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய வகையிலான கடும் வெப்பமான வானிலை, எதிர்வரும் ஏப்ரல் மாதம் வரை நீடிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த வளிமண்டலவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் மெரில் மெண்டிஸ், சர்வதேச ரீதியில் கடந்த சில ஆண்டுகளில் சராசரி வெப்பநிலை வழமையை விட 1 முதல் 1.5 பாகை செல்சியஸ் வரை அதிகரித்துள்ளது. இதுவே தற்போதைய கடும் வெப்ப நிலைக்கு முக்கிய காரணமாகும்.

பசிபிக் பெருங்கடலில் ஏற்பட்டுள்ள “எல் நினோ” காலநிலை மாற்றத்தினால் கடல் மேற்பரப்பு வெப்பநிலை மேலும் அதிகரித்து வருகின்றது.

இதன் விளைவாக, எதிர்வரும் வாரங்களில் நாட்டின் வெப்ப நிலை வழமையை விடவும் மிக அதிகமாகக் காணப்படும் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

தற்போது நிலவும் வரட்சியான காலநிலையும் ஏப்ரல் மாதம் முழுவதும் நீடிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சப்ரகமுவ, வடமேல், மேல், வடமத்திய மற்றும் தென் மாகாணங்களிலும், வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்கள் வெப்ப நிலை அதிகரிப்பினால் கடுமையாகப் பாதிக்கப்படலாம் என அடையாளம் காணப்பட்டுள்ளன - என்றார். (அ)

## புதுக்குடியிருப்பு வர்த்தக சங்கத்தினர் பிரதி அமைச்சர் உபாலியுடன் சந்திப்பு



முல்லைத்தீவு, மார்ச் 26
முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு வர்த்தக சங்கத்தினருக்கும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக்குழு தலைவரும் கூட்டுறவு பிரதி அமைச்சருமான உபாலி சமரசிங்கவுக்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்று புதுக்குடியிருப்பு பகுதியில் இடம்பெற்றது.

புதுக்குடியிருப்பு வணிகர்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகள் குறித்து இதன்போது கவனம் செலுத்தப்பட்டது. புதுக்குடியிருப்பு வர்த்தக சங்கத்துக்கென கட்டடம் இல்லாதமை குறித்தும் இதில் ஆராயப்பட்டது.

புதுக்குடியிருப்பிலிருந்து கொழும்புக்கான குளிரூட்டப்பட்ட பஸ் சேவை ஆரம்பிக்கப்படவேண்டும் எனவும் கோரிக்கை முன் வைக்கப்பட்டது. (அ)

## கோழி இறைச்சி, முட்டை விலைகள் திடீர் உயர்வு!

கொழும்பு, மார்ச் 26
இலங்கையில் தற்போது ஒரு முட்டையின் விலை 40 ரூபாயாகவும், தோலுடன் கூடிய ஒரு கிலோ உறைந்த கோழி இறைச்சியின் விலை 100 ரூபாயிலும் உயர்ந்துள்ளது.

சிறிய முட்டையின் விலை 37 ரூபாயாகவும், நடுத்தர முட்டையின் விலை 39 ரூபாயாகவும் பெரிய (சிவப்பு) முட்டையின் விலை 41 ரூபாயாகவும் உயர்ந்துள்ளது.

இதன்படி எரிபொருள் விலை உயர்வு மற்றும் எரிவாயு விலை உயர்வு ஆகியவை கோழி வளர்ப்பு நடவடிக்கைகளைக் கடுமையாகப் பாதித்துள்ளதாக இலங்கை கால்நடை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் அஜித் எச்.குணசேகர தெரிவித்துள்ளார்.

கோழிப் பண்ணைகளில் இளம் கோழிக்குஞ்சுகளைச் சூடுபடுத்த எரிவாயு பயன்படுத்தப்படுகிறது. ஆனால் எரிபொருள் விலை உயர்வு கோழி வளர்ப்புத் தொழிலை வழக்கத்திற்கு மாறாகப் பாதித்துள்ளது என்று அவர் கூறியுள்ளார்.

தற்போது, ஒரு கிலோ கோழி இறைச்சியின் விலை 1200 முதல் 1250 ரூபாய் வரை உயர்ந்துள்ளது.

டீசல் விலை உயர்வால் கடலுக்குச் செல்லும் படகுகளின் எண்ணிக்கை குறைதல், சந்தையில் கிடைக்கும் மீன்களின் அளவு குறைதல், பன்றி இறைச்சி உற்பத்தி குறைதல், ஒரு கிலோ மாட்டிறைச்சியின் விலை 2,800 ரூபாயாக உயர்தல், மற்றும் ஒரு கிலோ ஆட்டு இறைச்சியின் விலை 3,500 ரூபாயை தாண்டுதல் போன்ற காரணங்களால் கோழி இறைச்சிக்கான தேவை அதிகரித்துள்ளது என்று அவர் குறிப்பிட்டார். (அ)

## கமநல மையங்கள் ஊடாக மாத்திரம் உரங்களை விநியோகிக்க தீர்மானம்

கொழும்பு, மார்ச் 26
நெல் விவசாயிகளுக்குத் தேவையான உரங்களை விநியோகிக்கும் நடவடிக்கையை கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் இயங்கும் கமநல சேவை மையங்கள் ஊடாக மாத்திரம் முன்னெடுப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் சிறுபோகத்தில் நெற்செய்கைக்கு தேவையான உரங்களை வழங்குவதற்கான நடைமுறை குறித்து கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் தம்மிக ரணதுங்க தெரிவிக்கையில்-

தற்போதைய சர்வதேச போர்ச் சூழலைக் கருத்தில் கொண்டு, எதிர்காலத் தில் உரங்களின் விலை அதிகரிக்கக்கூடும் என்ற அச்சத்தில் சில தரப்பினர் உரங்களை அதிகளவில் கையிருப்பில் வைக்க முயற்சிப்பதாகக் கருதப்படுகிறது. இவ்வாறான நிலைமையைத் தவிர்ப்பதற்காகவே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, நெல் விவசாயத்திற்குத் தேவையான அனைத்து உரங்களையும் எமது கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் சேவை மையங்கள் வாயிலாக விவசாயிகள் பெற்றுக்கொள்ள முடியும். நாடு முழுவதும் சுமார் 566 கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் சேவை மையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

தற்போது கூட, பிரதான நெல் உற்பத்திப் பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்குத் தேவையான உரங்களில் பெரும் பகுதி இந்த மையங்களின் மூலமே விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

எதிர்வரும் யல பருவத்திற்கு தேவையான உரக் கையிருப்பு தொடர்பில் எவ்வித தட்டுப்பாடும் இல்லை என்பதை தேசிய உரச் செயலகம் உறுதிப்படுத்தியுள்ளது.

எனவே, தங்களுக்குத் தேவையான உரங்களை எமது கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் சேவை மையங்கள் ஊடாகப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம் -என்றார். (அ)

## எரிபொருள் பவுசரில் மறைத்து வைக்கப்பட்ட 6,600 லீற்றர் டீசல்!

### ஒருவர் பொலிஸாரால் கைது

கொழும்பு, மார்ச் 26
அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமான முறையில் பெருமளவிலான எரிபொருளைச் சேமித்து வைத்திருந்த நபர் ஒருவர் மொரகஹஹேன, கோனபொல பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

வலான ஊழல் ஒழிப்பு பிரிவின் அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலையடுத்து முன்னெடுக்கப்பட்ட இந்தச் சோதனையின்போது, சந்தேகநபரின் வீட்டின் வளவினுள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த எரிபொருள் பவுசர் ஒன்று சோதனையிடப்பட்டது.

இதன்போது, பாணந்துறை பகுதியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றுக்குச் சொந்தமானது எனக் கூறப்படும் அந்த பவுசருக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 6,600 லீற்றர் டீசல் கைப்பற்றப்பட்டது. அத்தோடு, குறித்த சந்தேகநபரின் வீட்டிற்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 152 லீற்றர் டீசல் அடங்கிய ஒரு பீப்பாய், 120 லீற்றர் பெற்றோல் அடங்கிய ஒரு பீப்பாய் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்டவர் கோனபொல பகுதியைச் சேர்ந்த 46 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 26.03.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.